# மலையகத் தமிழர்களின் வாழ்வியலிலிருந்து வழக்கொழியும் சொற்கள்: மொழியியல் சார் சமூகவியல் ஆய்வு

# The Obsolete Words in the Upcountry Tamil Usage: A Sociological Study Based on Linguistics

வேலு உதயசேகர்

Research Student, No 100/1, Kovila lane Alton Estate upper Division, Upcot.Srilanka.
udayasir3@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்.**

மனிதன் தன் கருத்தை வெளிப்படுத்த உருவாக்கிக் கொண்ட ஒப்பற்றக் கருவி மொழியாகும். தான் வாழும் சமூகப்¸ பொருளாதார¸ கலாசார சூழமைவுகளுக்கேற்ப மொழியை கையாள்கின்றான். வாழ்க்கை முறை¸ பின்பற்றும் நடத்தைகள்¸ அறிவு விருத்தி¸ இலக்கியப் பயில்வு¸ உற்பத்தி வெளியீடுகள் போன்றன ஒரு மொழியின் சொற்களஞ்சியங்களை உருவாக்குவதில் செல்வாக்கு செலுத்தி வருகின்றன. அதேபோல் மொழியில் பாரம்பரியமாகப் பாதுகாக்கப்பட்டு அல்லது பயிலப்பட்டு வந்த பல சொற்கள் அழிந்தும் வருகின்றன. இலங்கையில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையே தமிழர்கள் என அடையாளப்படுத்துவது பிரதானமாக தமிழ்பண்பாட்டை பின்பற்றும் இரு வேறு மக்கள் குழுமத்தினரையாகும். ஒன்று ஈழத்தமிழர் மற்றையது மலையகத் தமிழர்கள். இவ்விரு வகுதியினரும் எவ்வாறு வேறுபடுகின்றனர்¸ மொழிப்பிரயோகம் எத்தகையது¸ மலையக தமிழர் என்ற சொற்பிரயோகத்தின் பொருத்தப்பாடு, எவ்வகையான சொற்கள் மலையகத் தமிழர்களின் வாழ்வியலிலிருந்து வழக்கொழிந்துள்ளன¸ அதற்கான காரணங்கள் யாவை¸ அதனால் எதிர் கொள்ள நேரிடும் சவால்கள் முதலானவற்றை இவ் வாய்வு வெளிப்படுத்த முயலுகின்றது. அதற்காக பொருத்தமான இடத்தெரிவை மேற்கொண்டு எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறையினூடாக¸ நேர்காணல் மற்றும் களவிஜயம் மூலம் முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் இலக்கிய மீளாய்வுகளாக மலையக மக்களின் வாழ்வியலைப் பேசும் நூல்கள்¸ சஞ்சிகைகள் பத்திரிகைக் கட்டுரைகள்¸ மொழி தொடர்பான நூல்கள்¸ இணையவழி உசாவல்கள் முதலியவற்றை இரண்டாம் நிலைத் தரவுகளாகக் கொண்டு விவரண ஆய்வு முறையினைக் கையாண்டு விளக்க முற்பட்டுள்ளதுடன், மேல் நோக்கிய அணுகுமுறை ( Bottom to Top approach), மற்றும் கீழ் நோக்கிய அணுகுமுறை( Top to Bottom approach) என்பவற்றையும் துணையாகக் கொண்டு ஆய்வுக் கட்டுரை முன்வைக்கப்படுகின்றது.

**அறிமுகம்.**

மலையகத்தில் பெருந்தோட்டத் தொழில் துறையை சார்ந்துள்ள சமூகம் இன்று பாரிய மாற்றங்களுக்கும் முன்னேற்றங்களுக்கும் உற்பட்டு வருகின்றது. மாற்றம் என்பது நிரந்தரமாகும் போது மாற்றமானது மனித உயிர்களை பேணி காக்கும் மாற்றமாக அமைய வேண்டும். கால மாற்றத்திற்கு ஏற்ப நாம் நம்மை மாற்றியமைத்து கொள்வது சிறந்த விடயமே . உலகமயமாக்கல், தொழில்நுட்பம் என்பவற்றில் எம்மை தொலைத்து விட்டு சமூக மாற்றத்தை ஏற்படுத்த முனையும் போது சமூகத்தினருக்கு அது தாக்கமாகவே அமையும். மாற்றங்களுக்குள்ளாகும் வாழ்வியல் நெறிகளினடிப்படையில் அவர்களின் மொழிப் பயன்பாடும் மாற்றங்களுக்கு உற்படுகின்றன. மொழிப் பயன்பாட்டைக் கொண்டு மொழியை இரு அடிப்படையில் நோக்கலாம். ஒன்று சாதாரண மக்கள் மொழியை தொடரபாடல் ஊடகமாகப் பயன்படுத்துதல். மற்றொன்று மொழியியலாளர்கள் மொழியை நியதிகளின் அடிப்படையில் கையாளுதல். இவ்விரு நிலைகளிற்கும் முன்னோடியாக திகழ்வது சாதாரண மக்களின் பேச்சு மொழியாகும். பேசுபவர் இல்லையெனில் மொழி இறந்து விடும். இவ்வாய்வு சாதாரண மக்களிடமிருந்து வழக்கொழிந்து போகும் சொற்கள் தொடர்பான தேடலின் முன்வைப்பாக அமைகின்றது.

**மலையக தமிழர் என்ற பதப் பொருத்தப்பாடு.**

இலங்கையின் மத்திய மலை நாட்டில் வாழ்கின்ற இந்திய வம்சாவளித் தமிழர்கள் மலையகத் தமிழர்கள் என்ற பதப்பிரயோகத்திற்கு உரித்துடையவர்களாவர். பிரித்தானிய காலனித்துவத்தின் போது 1820களின் பின்னர் உருவாக்கப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கான தொழிற்படையினராக இலங்கைக்குத் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் தேயிலை உற்பத்திக்கான தொழிற்படையினராக மலை நாட்டில் தங்கி 200 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர். பெரிதும் மலை சூழ்ந்த புவியியல் அமைவில் வாழ்வதால் மலையக மக்கள் என்றும் தமிழே தாய்மொழியாக இருப்பதால் இனத்தினையும் மொழியினையும் காரணமாகக் கருதி மலையக தமிழர் என்ற அழைப்பு ஏற்புடையதாகி உள்ளது.

1823 முதல் சிறுக சிறுக ஆரம்பிக்கப்பட்ட குடியமர்வுகள் 1860 களிற்குப் பின்னர் நாட்டின் 1200 அடிகளுக்கு மேற்பட்ட உயர் மலைப் பிரதேசங்கள் நிரந்தரமான குடியேற்ற இடங்களாக மாறின உழைப்பைத்தவிர வேறு எதையும் வழங்க முடியாத தோட்டத் தொழிலாளர்கள் தமது உடலுழைப்பை மூலதனமாக்கி காடுகளை அழித்து கற்பாறைகளைத் தகர்த்து வளமிக்க நாடாக மாற்றியபோது உழைப்பை வழங்க எங்கு தங்கினார்களோ அதுவே இன்றும் நிலைத்திருக்கின்ற இந்திய வம்சாவளி பெருந்தோட்ட மக்களின் நிரந்தரவாழ்விடம் ஆகும். இந்நாட்டின் வேறு எந்த வளமான பகுதியையும் அபகரித்து அதில் குடியேறவில்லை. மலை சூழ்ந்த பிரதேசத்தை மையமாகக் கொண்டு 200 வருட கால அரசியல், பொருளாதர மற்றும் பண்பாட்டு அம்சங்களால் உரு கொண்ட மலையக மக்கள் என்ற இன அடையாளம் நிலைபெற்றுள்ளது.[1]

இலங்கை நாட்டில் வாழும் இனங்களை மொழி அடிப்படையில் நோக்குமிடத்து சிங்களம் தமிழ் ஆங்கிலம் பேசுவோர் என பொதுவாக வகைப்படுத்தும் போது இங்கு மலையகத்

தமிழர் என்று அடையாளப்படுத்துவது பொருத்தமானதா என்ற வினா பிறக்க வாய்ப்புண்டு. உண்மையில் தமிழ் பேசும் மக்களை தமிழர்கள் என்று நோக்கினாலும் அடிப்படையில் மலையகத் தமிழர்களும் இலங்கைத்தமிழர்களும் சிறப்பான வேறுபாடுகளையும் வரலாற்றுப் பின்னணிகளையும் கொண்டிருப்பதால் இவ்வேறுபாடு யதார்த்தமானதாகும். இவ்வேறுபாடு தொடர்பாக "மலையகமும் மறுவாழ்வும்" என்ற நூலில் மல்லியப்பு சந்தி திலகர் எடுத்துக்காட்டும் விடயங்கள் கவனத்திற்குரியதாகும். " இலங்கையை பூர்வீகமாகக் கொண்டு வாழும் ஈழத்தமிழர் அல்லது இலங்கைத் தமிழர் என்போர் படிப்படியாக முன்னோக்கி பல்லாயிரம் வருடங்களாக வளர்த்தெடுத்த தங்களை தங்களுக்கேயுரிய பண்பாட்டு, பழக்கவழக்க, கலாச்சார சட்ட நடைமுறை, கல்வி அடிப்படையில் உறுதி பெற்று, பூர்வீக சிங்கள மக்களிலிருந்து பிரிந்து சென்று தனித்து வாழ கோரிக்கை விடுக்கும் நிலையில் உள்ளவர்கள், மாறாக மலையகத் தமிழர் என்போர் இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு இலங்கை நாட்டில் கூலிகளாக வாழத் தொடங்கி படிப்படியாக இலங்கையராகி….இன்று இலங்கை நாட்டின் பிரஜையாக மீண்டும் மீண்டும் வலியுறுத்தி இறுகத் தக்கவைத்துக்கொள்ள பிரயத்தனப்படுவோர் எனவும் கொள்ளலாம்." (பக் 29), " மொழியடிப்படையில் ஈழத் தமிழர்கள் தமிழ்மொழி பேச்சுவழக்கில் பாணர் பரம்பரை, இந்திய மலையாளப் பாரம்பரிய சொற்பண்பு கலந்த தமிழ் உச்சரிப்புப் பாணியும் கொண்டவர்கள். மலையகத் தமிழர்கள் தமிழ் நாட்டு தென்னிந்திய பாரம்பரிய சொற்கள் கலந்த உச்சரிப்பும் பாணியும் கொண்டவர்கள்" (பக் 30)[2]. எனவே மேற் தரப்பட்ட விளக்கமானது இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையே மலையக தமிழர்கள் இனத்தாலும் மொழி பாரம்பரிய பின்புலத்தாலும் வேறு பட்டுள்ளமையை ஓரளவு புரிந்த கொள்ள முடியும்.

**ஆய்வுக்கான இடத்தெரிவு.(ஆய்வுக்களம்).**

மலையகத் தமிழர்கள் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் பரவலாக வாழ்ந்து வருகின்றபோதும் மிக நெறுக்கமாக நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களிலேயே செறிந்து வாழ்கின்றனர். " பெருந்தோட்டத் துறையில் வாழ்பவர்களின் எண்ணிக்கை 914678 ஆகும்……இந் நாட்டில் நுவரெலியா பதுளை உட்பட 15 மாவட்டங்களில் பெருந்தோட்டங்கள் காணப்படுகின்றன. அங்க வாழ்பவர்களில் 90 சதவீதமானோர் இந்திய வம்சாவளி தமிழர்களாகும்.[3] இலங்கையின் 2012ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி புள்ளி விபரம் இதனை தெளிவுப்படுத்துகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் மொத்த இந்திய வம்சாவளியினரின் தொகையில் 377¸637 பேரும் பதுளை மாவட்டத்தில் 150484 பேரும் மொத்தமாக 558121 பேர் இரு மாவட்டங்களிலும் வாழ்கின்றனர்.[5] எனவே ஒப்பீட்டளவில் மலையகத் தமிழர்களின் கலை கலாசார பண்பாடுகளைப் பாதுகாக்கிகன்ற சூழல் இங்கு காணப்படுவதால் இவர்கள் மத்தியில் காணப்படும் மொழிப்பயன்பாட்டிலிருந்து வழக்கொழியும் சொற்களைத் திரட்டுவதற்கான

ஆய்வுக்களமாக இவ்விரு மாவட்டங்களைத் தெரிவு செய்தமை பொருத்தமென கருதுகின்றேன். மேலும் இம்மக்கள் வாழும் ஏனைய காலி¸ மாத்தறை¸ இரத்தினபுரி¸ கம்பஹா¸ களுத்துறை¸ மாத்தளை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் பெரும்பான்மையினத்தினரோடு கலப்புற்று வாழ்வதால் இயல்பாகவே தமிழ் சொற்கள் மாறுதலுக்கும் மறப்பிற்கும் உட்பட்டிருக்கும் என்பதை ஆய்விற்குட்படுத்த அவசியமில்லை.

**மாதிரி எடுப்பு முறை.**

மலையக சமூக அசைவியக்கத்தில் பாரம்பரிய தொழிலாளர்கள் மட்டுமென்ற நிலையைத்தாண்டி புதிய கட்டமைப்பொன்றைக் காணமுடிகின்றது. இலவசக்கல்வியின் தாக்கத்தால் கல்வி கற்ற அரச மற்றும் அரச சார்பற்ற¸ சுயமான தொழிலில் ஈடுபடும் புதிய மத்தியதர வர்க்கம் ஒன்று தோன்றியுள்ளது. இப்பிரிவினர் மலையகத்தின் இயக்கச்சக்தியின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றார்கள். இவ்விடயம் தொடர்பில் வ. செல்வராஜா அவர்கள் மலையக மக்களும் புத்திஜீவிகளும் ஒரு மீள்நோக்கு என்ற கட்டுரையில் “ இன்று மலையகத்தில் ஆசிரியர்களாகவும்¸ வைத்தியர்களாகவும்¸ சட்டத்தரணிகளாகவும்¸ பொறியியலாளராகவும்¸ வர்த்தகர்களாகவும்¸ விவசாயிகளாகவும்¸ சுயதொழில் முயற்சியாளர்களாகவும்¸ அரச தனியார் துறைகளின் ஊழியர்களாகவும்¸ அரசியல்வாதிகளாகவும்¸ தொழிற்சங்க உத்தியோகத்தர்களாகவும் அம்மத்தியதர வர்க்கம் பரந்து விரிந்து பலம் வாய்ந்ததாக வளர்ந்து வருகின்றது.” எனக் குறிப்பிடுகின்றார்.[5] தோட்டத் தொழிலில் ஈடுபடும் மக்களோடு இத்தகைய மத்தியதர வர்க்கத்தினரின் பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆய்வுக்கான மாதிரி எடுப்பினை எழுமாறாக மேற்கொண்டுள்ளேன். இதன்படி மாதிரி எடுப்பில்

1. 15 தொடக்கம் 25 வயதைக் கொண்ட இளைஞர்கள் 40 பேர்
2. உயர்தர மற்றும் சாதாரண தர கல்வி பயின்று வரும் மாணவர்கள் 300 பேர்.
3. தோட்டத் தொழிலில் ஈடுபடும் திருமணமாண 40 வயதிற்குக் கீழ்பட்ட பெற்றோர் 62 பேர்
4. 35 வயதிற்குக் கீழ் பட்ட ஆசிரியர்கள் 28 பேர்.
5. தொழிற்சங்க செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்க வாதிகள் 09 பேர். உள்வாங்கப்பட்டனர்.

**மலையக தமிழர்களின் வாழ்வியலும் மொழியும்.**

மலையகத் தமிழரது மொழி மற்றும் பண்பாடு எத்தகையது என்பதை பரிந்து கொள்ள வேண்டுமெனின் மக்களின் பூர்விக வாழ்விடமான தென்னிந்திய பிரதேசங்களைப் பற்றிய அறிவு அவசியமாகின்றது. தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்கள் திருச்சி¸ மதுரை¸ இராமநாதபுரம்¸ தஞ்சாவூர் முதலான பிரதேசங்களிலிருந்து வந்தவர்களாகும். தமிழ் நாடு சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமைக்குரியது சங்கமருவிய காலத்திலே தமிழோடு வட மொழியும் கலந்தது. 13ம் நூற்றாண்டில் தமிழும் வடமொழியும் ஒரு சேர வளர்ந்தமையை இலக்கிய வரலாற்றாசிரியர்கள் இலக்கிய படைப்பில் மணிப்பிரவாள நடை என சிறப்பிக்கின்றனர்.இதனால் புதிய சொற்களும் தமிழைப்போல் மக்கள் வாழ்வில் இடம்

பிடித்துக்கொண்டன. உதாரணமாக தர்மம்¸ நீதி¸ அங்கம்¸ சந்தேகம்¸ தேகம்¸ சங்கீதம்¸ ராகம்¸ ஆச்சரியம் போன்றன.

சேர சோழ பாண்டியர் ஆட்சிகாலங்களில் மிகப் பெரிய இதிகாச புராணங்களும்¸ ஆழ்வார்களின் பாசுரங்களும்¸ ஆற்றுப்படை இலக்கியங்களும்¸ மன்னர்கள் தொடர்பான உலா பிரபந்தங்களும் தமிழகத்தில் தோன்றி நிலைபெற்றன இன்றும் வழக்கில் உள்ளன இத்தகைய இலக்கிய செல்வங்கள் மக்கள் மத்தியில் பரவி வாழ்க்கையோடு பிணித்து நின்றதால் இவற்றோடு தொடர்புபட்ட சொற்பதங்களையும் வரலாற்றுச் சம்பவங்களையும் தமது அன்றாட வாழ்க்கை மொழியில் பயன்படுத்தத் தொடங்கினர். இலக்கிய வரலாற்றாசிரியர்கள் இலக்கிய வரலாற்றுக் கால ஒழுங்கை பின்வருமாறு வகுத்துத் தந்துள்ளனர்.[6]

சங்க காலம் கி.பி. 1ம் நூற்றாண்டு தொடக்கம் 3ம் நூற்றாண்டு வரை.

சங்கமறுவிய காலம் கி.பி. 3ம் நூற்றாண்டு தொடக்கம் 6ம் நூற்றாண்டு வரை.

பல்லவர் காலம் கி.பி. 6ம் நூற்றாண்டு தொடக்கம் 9ம் நூற்றாண்டு வரை.

சோழர் காலம் கி.பி. 9ம் நூற்றாண்டு தொடக்கம் 12ம் நூற்றாண்டு வரை

நாயக்கர் காலம் கி.பி. 13ம் நூற்றாண்டு தொடக்கம் 19ம் நூற்றாண்டு வரை.

19ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட இற்றை வரையான காலத்தை ஐரோப்பியர் காலம் என மிக நீண்ட 3000 ஆண்டு கால இலக்கியப் போக்கையும் மக்களின் வாழ்க்கைப் போக்கையும் பார்க்கும்போது தமிழகத்திலே வாழ்ந்த மக்கள் இவற்றின் ஆழ்ந்த தாக்கத்திற்கு உற்பட்டவர்களாகவே வாழ்ந்திருக்கமுடியும் என்பது வெளிப்படையாகும். இத்தகைய சூழலிருந்து இலங்கை நோக்கி வந்த மலையகத் தமிழர்களின் பேச்சு மொழியானது பண்பட்டதாகவும் பிராந்திய வழக்குகளையும் பிற மொழி கலந்த சொற்பிரயோகமகவும் இருக்கும் என்பதில் வியப்பில்லை. ஆகவே இவர்கள் ஈழத்து மொழி வழக்கிலிருந்து வேறுபட்ட பண்பாட்டுக் கோலத்தை உடைய மொழிச் சமூகமாக விளங்குகின்றனர். மக்களின் பேச்சு வழக்கில் தமிழக நாட்டாரியல் மரபுகள் புராண பாத்திரப் பெயர்கள் தமது அன்றாட வாழ்க்கையோடு தொடர்புபட்ட தொழில் நிமித்த வார்த்தைப் பிரயோகங்கள் என்பன உட்பொதிந்து காணப்படுகின்றன. மேலும் தொன்மையும்¸ பிரரைச் சாராத¸ பிறவற்றிலிருந்து உருவாகாத¸ சுய மரபும் செறிவும் சிறப்பும் வாய்ந்த பழமையான இலக்கியங்களைக் கொண்ட மொழியைச் செம்மொழி(Classical Language) என்பர்.[7] தமிழும் அத்தகைய செம்மொழி ஆகும். மலையகத் தமிழர்களும் செம்மொழி பாரம்பரியத்திற்குற்பட்டவர்கள்.

**கிராமிய முறை மாற்றம்**

பொதுவாக தென்னிந்திய மரபிலே கிராமிய வாழ்க்கைச் சூழலுக்கப்பட்ட இவர்கள் கிராமிய தெய்வங்கள் கிராமிய விளையாட்டுக்கள் கிராமிய தொழில் முறை என்பவற்றைப் பரைச்சாற்றும் சொல்லாடல்களையும் வெளிப்படுத்தி வந்துள்ளனர் எடுத்துக்காட்டாக கிட்டியடித்தல், பிள்ளையார் பந்து அடித்தல், சிலம்பம் சுழற்றுதல், பாண்டியாடுதல், தாயம் உருட்டல் முதலான விளையாட்டுக்களும் கிராமிய வழிபாட்டு முறைகளும் நிலைப் பெற்றிருந்தன. நீண்டகாலமாக வெளியுலகத் தொடர்பற்ற திறந்த வெளிச்சிறையான தோட்டச்

சூழலிலே வாழ்ந்தமையால் தாம் கொண்டு வந்த பண்பாடு அது சார்ந்த மொழியமைப்பு அவ்வாறே இருந்தது. தற்போது வெளியுலகத் தொடர்பின் விரிவாக்கம் அக்கட்டமைப்பை தகர்த்துள்ளது இதனால் புதிய சொல்லாடல்களை அதிகம் காணலாம்.

**பெயரிடலில் ஏற்பட்ட சொல்லிழப்பு.**

பாரம்பரிய நம்பிக்கையையும் கிராமிய தெய்வ வழிபாட்டு முறைகளையும் காட்டுவதில் இம்மக்களின் பெயர்கள் சிறப்பான ஆதாரமாக உள்ளது. முத்தம்மா¸பேச்சியம்மா¸முனியாண்டி¸ காளியம்மா¸ பேச்சாய்¸ சங்கிலி¸ மதுரவீரன்¸ எல்லக்கருப்பு¸ சுடலை¸ முதலான பெயர்கள் கிராமிய தெய்வப் பெயர்களாகும். ராமன்¸ பாண்டியன்¸ வெள்ளையன்¸ நீலகண்டன்¸ மயில்வாகணன்¸ சீதா¸சீதையம்மா¸ இராமன்¸ அருச்சனன் தர்மராஜ்¸ நலக்குமார் முதலானவை புராணப் பெயர்கள். கடந்த ஐந்தாண்டுகளில் ஆய்வுப் மாவட்டத்தில் எழுமாறாக தெரிவு செய்த ஐந்து பாடசாலைகளில் தரம் ஒன்றிற்கு சேர்க்கப்பட்ட மாணவர்களின் பெயர்கள் தொடர்பான அவதானிப்பில் மேற்குறித்த எந்த பெயர்களும் பிள்ளைகளுக்கு இடப்பட்டிருக்கவில்லை. பெயர்களில் முன்னோர் பின்பற்றிய பண்பு ரீதியான காரணங்கருதிய பெயரிடல் முறைகள் அருகி விட்டன. எடுத்துக்காட்டாக வெள்ளையன்¸ நல்லத்தம்பி¸ பூரணம்¸ தவச்செல்வன்¸ செல்வமணி¸ நடராஜன் முதலியன அதேவேளை பெயரிடலில் வட மொழி எழுத்துக்களான ஜ¸ஹ¸ஶ்ரீ¸ஸ¸ஷ எழுத்துக்களின் ஒலிப்பில் பிறக்கும் சொற்களிலான பெயர்களுக்கு முக்கியத்துவம் வழங்குவது பெருகி வருகின்றது. புராண இதிகாச இலக்கிய பயில்வுகளும் உரையாடல்களும் செவிவழி போதனைகளாக அன்றி எழுத்துவழி களஞ்சியமாக நிற்பதால் அவை சார்ந்த சொற்களும் இன்று பயன்பாட்டில் இல்லை.

**தொழில்சார் சொற்கள்.**

காலத்திற்குக் காலம் ஏற்பட்டு வரும் மாறுதல்களால் தொழில்முறையும் மாறறமடைந்து வருகின்றது. இன்று பெருமளவிலான மலையகத் தமிழர்கள் தோட்டத் தொழிலில் ஈடுபடுவதில்லை. அதனால் சமூகக் கட்டமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை மேலே கண்டோம். இந்நிலைமை பழமையான தொழில்சார் மொழியிழப்பிற்கும் காரணமாயுள்ளன. கண்டக்டர்¸ தலையாரி¸ கவ்வாத்துக்காரன்¸ மட்டத்துக்காரி¸ கவ்வாத்துக்கங்காணி¸ அடுப்புக்காரன்¸ வாட்டக்காரன்¸ ஓடும்பிள்ளை¸ வண்ணான்¸ மருத்துவச்சி¸ ஆயம்மா போன்றத் தொழிற்பெயர்களும் மாராப்புக் கான்¸ நெத்திக்கான்¸ ஒசுவு கான்¸ கரட்டெல¸ மொரட்டெல¸ மட்டத்துக்ககத்தி¸ குந்தாளம்¸ கூனி¸ தவரனை முதலான இட மற்றும் பொருட் பெயர்களின் பயன்பாடும் அருகி விட்டன. ஏனெனில் அத்தகைய தொழில் அம்சங்கள் பல நடைமுறையில் இல்லை. அதற்கான தொழிலாளர்களும் இல்லை. மாராப்புக் கான்¸ நெத்திக்கான்¸ ஒசுவு கான் என்பன ‘‘கான்’’ என்ற ஒற்றைச் சொல்லில் பயன்படுத்தப்படுகின்றன. கரட்டெல¸ மொரட்டெல என்பன முத்தலிலை என சொல்லப்படுகின்றன.

**அருகிய மொழியின் தன்மைகள்.**

ஐக்கிய நாடுகளின் கல்வி மற்றும் பண்பாட்டு நிறவனம் (UNESCO) உலகில் தற்போது பயன்பாட்டிலுள்ள மொழிகளில் 2100 ம் ஆண்டளவில் 5400 மொழிகள் அழிந்து விடும் என்ற எச்சரிக்கைவிட்டுள்ளது. இவ்வாறு அருகும் மொழியின் தன்மைகளை மொழி இறப்பு: பராமரிப்பு: கோட்பாடு: நடைமுறை மற்றும் விபரிப்பு அணுகுமுறைகள் என்ற நூல் ஐந்து நிலைகளாக வரிசைப்படுத்துகனிறது. அதில் குறிப்பிடப்பட்ட ஆபத்தான அருகிய நிலை மொழியைப் பேசுபவர்கள்: இடைப்பட்ட வயது வந்தவர்கள், இளையவர்கள், குழந்தைகள், யாரும் பேசுவதில்லை. மற்றையது இறக்கும் நிலை மொழியைப் பேசுபவர்கள் முதியோர்கள் மட்டுமே.[8] என்ற இரு நிலைகளையும் இங்கு ஒப்பு நோக்குதல் அவசியமாகின்றது. ஏனெனில் மேற்படி கள ஆய்வினை இளந் தலை முறையினர் மத்தியில் ஏற்கனவே திரட்டப்பட்டச் சொற்கள் தொடர்பாகக் கலந்துரையாடலினை மேற்கொண்ட பொழுது அதிகளவான பேச்சு வழக்குச் சொற்களை அறியாது காணப்பட்டதுடன் அறிந்த சொற்களுக்குப் பொருள் தெரியாத நிலையினையும் அவதானிக்க முடிந்தது. 45 வயதிற்குக் கீழ்பட்ட மக்கள் பிரிவினரே இச் சொற்களை அறியாத நிலையை அடையாளப்படுத்த முடிந்ததுடன் 45 வயதிற்கு மேற்பட்டோர் பயன்படுத்துதையும் காணமுடிகின்றமையானது பெருமளவிளான மலையகத் தமிழ் சொற்கள் அழிவிற்குற்படும் நிலையில் உள்ளது என்பதை உறுதி செய்ய முடிகின்றது. அவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட வழக்கொழியும் நிலையிலுள்ள பேச்சு வழக்குச் சொற்கள்.

மலையக மக்கள் தென்னிந்திய கிராமிய வாழ்க்கை முறையுடன் இலங்கைக்கு வந்து வாழத் தொடங்கினர். இலங்கையின் புவியியற் சூழல் தொழில் முறை என்பன அவர்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்திய வேளையிலும் பழைமை மாறாத மொழி பயன்பாட்டில் நிலை கொண்டவர்களாகவே இருந்துவந்துள்ளனர். ஆனால் காலப்போக்கில் புதிய தலைமுறை மக்களிடம் அப்பழைமையான சொற்களை பேச்சு மொழியில் அவதானிக்க முடியவில்லை.

கம்சு, லாம்பு, டப்பா, கொக்கனிப்பை, டப்பாசு, பனிக்கம், சரடு, மகுடி, கும்பா, மட்டக்கத்தி, கக்கா, படிகாசு, வகுடு, சிண்டு(முடி), தொலக்கம், ரொக்கம் முதலான பொருட் பெயர்களும் சிறு கோவத்தைக் குறிக்கும் மொனக்கடி காதலித்தல் என்ற பொருள்படும் பேச்சவார்த்தை துர்நாற்றத்தைக் குறிக்கும் கவிச்சி தற்பெருமையைக் குறிப்பதான பீத்தல் சைகையில் பேசுவதைக் குறித்த நைனபாசை என்றச் சொற்கள் வழக்கில் இல்லை.

காரணத்தை அடிப்படையாகக் கொண்டு பேசப்படுகின்ற சொத்தி, நொடம், துப்பு, பொறத்தியான், குருணா, மோப்பம், பச்சீட்டு, குடுத்தனம், அமுக்கனாங்கள்ளி, அரங்க, முண்ட, கவ்வோதி, கேலி, கருக்கல், நயாபைசா, மொடக்கு, சப்பாணி, சன்மாணம், கெப்பேஸ்திரி, நொண்டிச்சாக்கு, சோரம்போதல், நமைச்சல்,கொராக்கி, நட்டக்குத்து, மத்துக்கட்டை,சட்டாம்பிள்ளை, தீட்டுக்கட்டை, தருதலை, சம்மனம், ரகம், சேற, வெலாசம்,

மாராப்பு¸ தொந்தரவு¸ பித்தலாட்டம்¸ தோரண¸ வக்கு¸ தெப்பம்¸ கொராக்கி¸ சவுடால்¸ வங்குரோத்து¸ கமுக்கம் முதலான பெயர்ச்சொற்களும் வழக்கொழிந்துள்ளன.
சப்புக்கொட்டு¸ றொம்பு¸ கொதப்பு¸ முக்கு¸ லாத்து¸ பீத்து¸ சொக்கு¸ பசப்பு¸ பம்மாத்து¸ ராசியாகு¸ தண்டுராபோடு¸ படியள¸ நச்சரி முதலான வினைச்சொற்களும் அவுசாரி¸ ஓடும்புள்ள¸ வண்ணான் முதலான தொழிற் பெயர்களும் ஸ்தோப்பு¸ கோடிப்பக்கம்¸ பீலிக்கரை¸ பரதேசம்¸ அட்டல்¸ வரக்காடு¸ மோட்டுவளை¸ மோட்டுவாரம் போன்ற இடப்பெயர்களையும் இளையோர் பயன்படுத்துவதில்லை.

அடைமொழிகளும் இணைமொழிகளும் மொழியை அழகுபடுத்துகின்றன. அத்தகைய சொற்களான ஈவுளரக்கம்¸ சந்துபொந்து¸ வாடிவழக்கம்¸ முக்கிமொனகு¸ ஏப்பசாப்ப¸ அரசபொரசல்¸ அறக்கப்பறக்க¸ சந்தடிச்சத்தம் போன்ற இணைமொழிகளும் பேச்சு மொழியாக பயன்படுத்துவது குறைவடைந்து செல்கின்றமையை நடைமுறையில் காணமுடிகின்றது.

**ஏன் மொழி பாதுகாக்கப்படல் வேண்டும்?**

ஒரு இனத்தின் இருப்பை உறுதி செய்வது அவ்வினத்தின் பண்பாட்டுக் கூறுகளும் கலாசார அம்சங்களுமாகும். அவற்றை வெளிப்படுத்தும் வடிவமே மொழியாகும். மொழிப்பயன்பாடும் பண்பாட்டுக்கூறுகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கங்கள். மனித வரலாற்றை¸ வாழ்க்கைப்பதிவுகளை அடுத்தப் பரம்பரையினரிற்கு கையளிப்பதன் ஊடாக பரம்பரையின் தொடர்ச்சி நிலை பெறுகின்றது. எழுத்து மொழியை விட பேச்சு மொழியே இப்பணியை வினைத்திறனாக செய்கின்றது. அவ்வாறு செய்யாவிடின் இன இறப்பு¸ மொழி அருகுதல் என்பன தவிர்க்க இயலாதவைகளாகும். வரலாற்றில் உபிக் மொழியின் அழிவு சிறந்த பாடமாகும். ''துருக்கியின் வடமேற்குப் பகுதிகளில் பேசப்பட்ட மொழி உபிக். இம்மொழியை இறுதியாகப் பேசத் தெரிந்தவர் டெப்விக்எசன்ச் என்பவர் மட்டுமே. அவரது பரம்பரையினர் துருக்கி மொழியையே கற்று பயின்று வந்தனர். 1992ல் எசன்ச் இறந்து போனார். அவரது கல்லறையில் இது டெப்விக் எசன்ச்சின் கல்லறை உபிக் என்ற மொழியை பேசிய கடைசி மனிதர் இவர்தான் என்று எழுதப்பட்டுள்ளது.''[9] இது பேச்சு மொழி பாதுகாப்பின் அவசியத்தை உணர்த்தும் சமகால நிகழ்வாகும்.

அறிவுப் பெருக்கம்¸ கல்வி வளர்ச்சி¸ பொதுமொழியாற்றல்¸ தொழில் நுட்ப விரிவாக்கம் போன்றன உலகமயமாதல் என்ற நிலைப்பாட்டை வலு பெறச்செய்துள்ளது. இவற்றிலிருந்து விலகிச் செல்ல முடியாது. வல்லரசுகளின் வல்லாதிக்கமும் முதாலாளித்துவ சிந்தனைகளும் அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்துவது சிறுபான்மையின மக்கள் மீதாகும். " முன்பு பர்மா என அழைக்கப்பட்ட மியன்மார் நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களில் அநேகர் தமிழில் எழுதவோ வாசிக்கவோ அல்லது கதைக்கக் கூடவோ இயலாத நிலையில் காணப்படுகின்றனர். கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்ப் பாடசாலைகளை பர்மிய அரசு மூடியதால் இந்த நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ்ப்

பாரம்பரிய உடையான சேலையை அணிந்திருந்த தமிழ்ப் பெண்கள் நீண்ட தலைமுடியைக் கொண்டிருந்ததுடன் பூக்களையும் சூடியிருந்தனர் ஆனால் ஒரு தமிழ் வார்த்தையைக்கூடப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இவர்கள் இருந்ததாக அங்கு சென்று நிலைமைகளை அவதானித்த ஒருவர் தெரிவித்தார். பர்மா, அந்நியரிடமிருந்து சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து அங்கு பர்மிய மொழி கட்டாயப்படுத்தப்பட்டது. இதனால் தமிழ் மக்கள் 1960களில் தமது பாடசாலைகளை மூடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். காணிச் சீர்திருத்தங்கள், பர்மிய மொழி கட்டாயப்படுத்தப்பட்டமை, பர்மியர் முன்னுரிமைப் படுத்தப்பட்டமை என்பன தமிழ் மக்கள் தமது மொழியை மறந்த மியன்மார் தமிழ் மக்களாக மாறியமைக்கான காரணங்களாகும்.

தொடர்பெல்லை விரிந்துள்ள இக்காலத்தில் ஓர் இனத்தின் பண்பாடுகள் நிலைத்திருப்பிற்கும் உண்மையான உணர்வுபூர்வமான விடயவெளிப்பாட்டிற்கு பண்பாடறிந்த பட்டறிவினால் வெளிப்படும் மொழிப் பயன்பாட்டாலேயே இயலுமாகின்றது.

**முடிவுரை.**

இலங்கையில் வாழ்கின்ற பல்லின மக்கள் மத்தியில் மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து தொழில் நிமித்தம் ஆங்கில ஆட்சிக்காலத்தில் அழைத்து வரப்பட்டு குடியமர்த்தப்பட்டவர்களாவர். இவர்களின் வருகையின்போது அவர்கள் நன்கு பழக்கப்பட்ட தமிழ் பாரம்பரியத்தோடு இணைந்த கிராமிய வாழ்க்கை முறையினையே கொண்டுவந்து அதனை தமது வாழ்விலும் பிரதிபலிக்கச் செய்துள்ளமையை பல்வேறு வாழ்வியல் அம்சங்களிலும் காண முடிகின்றது. இதன் வெளிப்பாடாகவே தமது தழிழ் மொழிப் பிரயோகமும் காணப்படுவதுடன் புவியியல் ரீதியிலும் வாழ்வியல் முறைகளிலும் ஈழத்தமிழர் மொழி வழக்கிலிருந்து வேறுபட்ட உச்சரிப்பு முறையினை கொண்ட பேச்சு மொழியனை கொண்டுள்ளனர். உலகில் எல்லாச் சமூகங்கள் மத்தியிலும் நிகழும் புறத்தாக்க மாற்றங்களால் தமது சுயத்தை இழத்தல் என்பது இங்கும் நிகழத் தொடங்கியுள்ளமைக்குச் சான்றாக பெருமளவிலான சொற்கள் வழக்கொழிந்து போகின்றமையை கவனிக்கமுடிகின்றது. சொல்லியல் அடிப்படையில் பெயரச்சொற்களும் வினைச்சொற்களும் சமமாக வழக்கொழிந்து வருகின்ற அதே வேளை புதிய தொழில் முறைகளால் அவை சார்ந்த சொற்களே பழக்கத்தில் வருவதால் பழைய சொற்கள் செயலிலழந்துள்ளமையை ஆய்வில் அறிய முடிகின்றது.

**பரிந்துரை.**

காலத்தின் தேவை தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக பழைமையான சொற்கள் வழக்கொழிந்து வருவது எல்லா மொழிகளிலும் இயல்பானது என்றாலும் இதன் தொடர்ச்சி இன அடையாளத்தை சிதைப்பதற்குக் காரணமாக முடியும். மேலும் மேலெழுந்த பொருள் கொண்ட சொற் பெருக்கம் மொழியின் ஆளுமையை குன்றச்செய்ய ஏதுவாகி விடுவதால் வாழ்வியல் சார் சொற்களை இளந் தலைமுறையினர் அறியச் செய்வதும் அவற்றை பயில் நிலைக்குக் கொண்டு வருவதும் காலத்தின் தேவையாகும். ஒரு இனத்தின் பண்பாட்டை எதிர்கால சந்ததியனிரிற்குக் கையளிக்கும் நடைமுறையில் மொழியின் பங்கு முக்கியமானது

பாரம்பரியத்தின் வெளிப்பாடு மொழியில் இருப்பதால் இளந்தலைமுறையினருக்கு முதியோர் சொல்லிக்கொடுத்தல் அவசிய மாவதுடன் இளையோரின் நாட்டமும் அதிகரிக்க வேண்டும்.

**அடிக்குறிப்பு.**

1. வேலு உதயசேகர் (2020) தொழிலாளர் வெளியேறுகையும் சமூகத் தாக்கங்களும் கட்டுரை. தினக்குரல் ஞாயிறு செப்டம்பர் 06 2020. பக்கம் 20.
2. தொகுப்பு வழக்கறிஞர் தமிழகன் 2018. மலையகமும் மறுவாழ்வும்இ மல்லியப்பு சந்தி திலகர் இலங்கையில் தமிழர்கள் கட்டுரை.பக் 29-30.
3. பேராசிரியர் ஏ.எஸ் சந்திரபோஸ். 2020. மலையக சமூகத்தில் தோன்றியுள்ள புதிய கட்டமைப்பு கட்டுரை பக்.172. நூல் மண்விழா மலர் ஏ.எஸ் சந்திரபோஸ் 2020.
4. குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு 2012.
5. இலக்கிய வரலாறு டாக்டர் ரா. சீனிவாசன். அணியகம் வெளியீடு.
6. வ.செல்வராஜா. 2020 மலையக மக்களும் புத்திஜீவிகளும் ஒரு மீள்நோக்கு கட்டுரை பக் 11.
7. கு.வெ. பாலசுப்ரமணியம் பண்பாட்டு வரலாறு 1இ தமிழ் இணையப் பல்கலைக்கழகம் .
8. மார்க் யேன்சு 2003. மொழி இறப்பு¸ பராமரிப்பு¸ கோட்பாடு¸ நடைமுறை மற்றும் விபரிப்பு அணுகுமுறைகள். பிலிடெல்பியா பெஞ்சமின் பதிப்பகம்.
9. கே.எஸ.இராதாகிருஸ்ணன். அமிவின் விழிம்பில் மொழிகள் கட்டுரை. தினமணி இ- பேப்பர் 2020.11.06.
10. நிவேதா. 2014. தமது மொழியை மறந்த மியன்மார் தமிழ் மக்கள் கட்டுரை.விபாஷா மலர் 2 இதழ் 14. 2014 ஏப்ரல்-மே இதழ்.பக்.24. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.
11. இரா.சடகோபன் 2010. கசந்த கோப்பி பக் 11-12.

## உசாத்துணைகள்.


1. ராதாகிருஸ்ணன். கே.எஸ் 2020 அமிவின் விழிம்பில் மொழிகள் கட்டுரை. தினமணி இ- பேப்பர் 2020.11.06.
2. உதயசேகர் வேலு (2020) தொழிலாளர் வெளியேறுகையும் சமூகத் தாக்கங்களும் கட்டுரை. தினக்குரல் ஞாயிறு செப்டம்பர் 06 2020. பக்கம் 20.
3. குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு 2012.
4. சடகோபன் இரா.2010. கசந்த கோப்பி பக் 11-12.
5. சந்திரபோஸ்ஏ..எஸ் பேராசிரியர் 2020. மலையக சமூகத்தில் தோன்றியுள்ள புதிய கட்டமைப்பு கட்டுரை பக்.172. நூல் மண்விழா மலர் ஏ.எஸ் சந்திரபோஸ் 2020.
6. சீனிவாசன். ரா இலக்கிய வரலாறு அணியகம் வெளியீடு.
7. செல்வராஜா.வ. 2020 மலையக மக்களும் புத்திஜீவிகளும் ஒரு மீள்நோக்கு கட்டுரை பக் 11.
8. தமிழகன் தொகுப்பாளர் 2018. மலையகமும் மறுவாழ்வும், மல்லியப்பு சந்தி திலகர் இலங்கையில் தமிழர்கள் கட்டுரை.பக் 29-30.
9. நிவேதா. 2014. தமது மொழியை மறந்த மியன்மார் தமிழ் மக்கள் கட்டுரை.விபாஷா மலர் 2 இதழ் 14. 2014 ஏப்ரல்-மே இதழ்.பக்.24. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.
10. பாலசுப்ரமணியம் கு.வெ. பண்பாட்டு வரலாறு 1, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் .
11. மார்க் யேன்சு 2003. மொழி இறப்பு¸ பராமரிப்பு¸ கோட்பாடு¸ நடைமுறை மற்றும் விபரிப்பு அணுகுமுறைகள். பிலிடெல்பியா பெஞ்சமின் பதிப்பகம்.
12. மாணவர் வரவு இடாப்பு அரச பாடசாலைகள். 2015 – 2020.

இணைனயத்தளம்.

1. http://www.bbc.com/tamil/arts-and-culture-458 12598.
2. http://ta.m.wikipedia.org/wiki/
3. http://www.tamilvu.org/ta/course-degree-c031-c0311-html.
4. http://www.google.lk/search/ei